# வட இலங்கையினது பொருளாதாரத்தில் பனையினது வகிபாகம்: ஒரு வரலாற்றுப் பார்வை

**கந்தையா அருந்தவராஜா**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*arunn.msu@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** வடஇலங்கையினது பொருளாதாரத்தில் அதனது பிரதான வருமான மூலங்களிலொன்றாக புராதன காலந் தொடக்கம் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் அமைந்திருந்தன. அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டுக்கும் முன்னதாக ஆரம்பித்து யாழ்ப்பாண அரசர்களது காலத்திலும் தொடர்ந்துவந்த ஐரோப்பியர்களது காலங்களிலும் சுதந்திரத்தின் பின்னராகவும் பல்வேறு வழிகளில் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் இவை செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன. வடஇலங்கை மக்களுக்குக் கற்பகதருவாக இருந்து அவர்களது பட்டினி வாழ்வினை அகற்றியது. நோயாளருக்கு மருந்தாகியது. யாழ்ப்பாணத்தரசர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் பிரதான வர்த்தகப் பொருட்களாக இருந்து வருவாயினைப் பெற்றுக் கொடுத்தது. பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியது. உள்நாட்டில் மட்டுமன்றி அக்காலப்பகுதிகளில் அயல்நாடுகளிலும் இத்தகைய பொருட்களுக்குப் பெரும் கிராக்கியிருந்தது. தற்காலங்களில் வடஇலங்கை மக்களிடையிலே பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஆர்வம் குறைந்திருந்தபோதும் வடஇலங்கையில் வாழுகின்ற மக்களில் சில குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தின் அடிப்படையாக இவற்றினை தற்போதும் நம்பியிருக்கின்றன. புராதன காலந்தொடக்கம் தற்போதுவரை பனையும் அது சார்ந்த பொருட்களும் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் பெற்றிருந்த சிறப்பினை ஆராய்வதும் அதனது மகத்துவத்தினை தற்காலத்தவருக்குப் புரிய வைப்பதும் ஆய்வினது பிரதான நோக்கங்களாகும். பனையினது வகிபாகத்தினை வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விரிவான முறையில் தனியாக எவரும் இதுவரை ஆராயவில்லையென்ற குறைபாடு உள்ளது. அதுமட்டுமன்றி இவ்விடயமாக வருங்காலங்களில் ஆய்வினை மேற்கொள்ள இருக்கின்ற ஆய்வாளர்கள் பலருக்கும் இவ்வாய்வானது முன்னோடியான ஆய்வாக அமையுமென்பது எனது நம்பிக்கை.முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் பண்புசார் ஆய்வாக அமைந்துள்ள இந்த ஆய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முற்தர ஆதாரங்களில் ஐரோப்பியர்களது அறிக்கைகள், அவணங்கள், சமகாலத்தேய படைப்புக்கள் என்பன பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையில் பிற்பட்ட காலங்களில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், நேர்காணல்கள் என்பன அடங்கியுள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது முடிவாகப் பனை மரமானது வடஇலங்கையில் உருவாகியது தொடக்கம் தற்போதுவரை அப்பகுதிகளில்,வசித்த வருகின்ற மக்களின் பொருளாதாரத்தில் செல்வாக்கினைச் செலுத்தி வருவதனை எவரும் மறுக்க முடியாது. பனை மரமென்ற வளமானது வடஇலங்கையில் இருந்திருக்காது விட்டிருந்தால் தற்போது அங்கு வாழ்ந்துவருகின்ற இனத்தினது வாழ்வே சிலவேளை வினாவிற்குரியதாக மாறியிருக்கும்.

**திறவுச்சொற்கள்:** பனம் பொருட்கள், பனைமர ஏற்றுமதி, சுதேச வளம், யாழ்ப்பாணத்தரகர்கள், ஐரோப்பியர்கள்

## அறிமுகம்

முழு இலங்கையினதும் பொருளாதார நடவடிக்கைகளில் வடஇலங்கையினது பங்கும் புராதன காலத்திலிருந்து தற்காலம்வரை கணிசமான அளவில் காணப்படுகின்றதென்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. அவ்வகையில் இப்பகுதிகளில் இயற்கையாகவே விளைந்து இப்பகுதி மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கை மக்களதும் ஆதரவிற்கு உட்பட்ட மரமாகப் பனை மரம் காணப்படுவதுடன் அதனது உற்பத்திப் பொருட்களும் கடல் தாண்டி மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெற்றதனைச் சான்றுகள் தெரிவிக்கின்றன. பனை மரத்திலிருந்து பெறப்படுகின்ற அனைத்துப் பொருட்களும் மனிதனுக்குப் பயன்படும் வகையில் காணப்படுகின்றன. இப்பின்னணியில்தான் வடஇலங்கை மக்களது பொருளாதாரத்தில் பிரதான பங்கினை வகித்தது. இதனது தோற்ற காலத்தினைச் சரியாகக் கணிப்பிட முடியாதுவிட்டாலும்கூட இதன் தோற்ற காலமானது தென்னிந்தியாவில் சங்ககாலத்திற்கும் முற்பட்டதாக எம்மால் அறியமுடிகின்றது. வடஇலங்கையில் இது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அடையாளங் காணப்படுகின்றது. அதாவது கி.மு எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இதனது தோற்ற காலம் இருந்திருக்க வேண்டும். பின்னர் தென்னிந்தியாவில் பல்லவரது செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் தென்னிந்தியத் தொடர்பின் பின்னணியில் பனையினைது செல்வாக்கானது வடஇலங்கையில் அதிகரித்தது. தொடர்ந்து சோழர்காலம், விஜயநகர அரசுகாலம் என வரலாற்றில் மாற்றங்கள் ஏற்பட பனை மரத்தினது செல்வாக்கும் அவற்றின் உற்பத்திகளின் பயன்பாடும் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் ஏற்பட்டு வருவாயினையும் அதிகரிக்கச் செய்தது. யாழ்ப்பாண அரசர்களது காலத்திலும் தொடர்ந்துவந்த ஐரோப்பியர்களது காலத்திலும் சுதந்திரத்தின் பின்னராகவும் இது தேசத்திற்கு அதிகரித்த வருவாயினைக் கிடைக்கச் செய்தது. இலங்கையில் டச்சுக்காரரது செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில்தான் அவர்கள் பனை மரத்தின் பயனை உச்ச அளவில்

பயன்படுத்தி செல்வத்தினைப் பெருக்கியதுடன் பனம் பொருள் தொடர்பான தொழிற்சாலையினை ஆரம்பித்து இந்நாட்டவர்களுக்குஇதன் மூலமாக வேலைவாய்ப்புக்களையும் வழங்கினர். குறிப்பாக அவர்களது காலத்தில் தேசத்தின் பொருளாதாரத்தில் பிரதான இடத்தினைப் பனை மரங்கள் பெற்றன என்பது நோக்கத்தக்கது. சுதந்திரத்தின் பின்பாகவும் அரசாங்கம் இதனது முக்கியத்தவத்தினை உணர்ந்து பனை மரத்தினது உற்பத்தியினை அதிகரிக்கச் செய்கின்ற நடவடிக்கைளில் தற்போதுவரை இறங்கியுள்ளதுடன் பனம் பொருட்களின் பாவனையினைஅதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளமை கண்கூடு.

**தோற்ற காலம்**

வடஇலங்கை மக்களது பரம்பரைச் சொத்தான பனையானது பல்வேறு பயன்களை மக்களுக்கு வழங்குவதனால் அது கற்பகதரு எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றது. பனையினைப் போன்று வேறு எந்தவொரு இனத்தின் சகல பாகங்களும் பிரயோசனமாக அமைவதில்லை. இது எப்போது முதன் முதலாக உருவாகியதென்பது சரிசரத் தெரியாதுவிட்டாலும்கூட இவை அதிகளவில் ஆசிய நாடுகளில்தான் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேசியா,கம்பூச்சியா,இந்தோனேசியா, மியன்மார். தாய்லாந்து, வியட்னாம், சீனா, மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோ,மாலி, நைஜீரியா, தன்சானியா போன்ற பகுதிகளிலும் இவை அதிகளவில் உற்பத்தியாகியுள்ளன. (பாக்கியநாதன்,மு.,2003,பக்.24-26) நமது நாட்டினைப் பொறுத்தவரை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதிகள், வன்னிப்பகுதிகள், கிழக்கின் சில பகுதிகள் ; எனத் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழுகின்ற பகுதிகளிலேதான் இவை அதிகளவில் காணப்படுகின்றன.இவ்வாறு இவை தேசத்தின் பல பகுதிகளிலும் இருப்பினும் தருகின்ற சுவைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் இவற்றில் வேறுபட்ட இயல்புகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பனை மரமானது வறண்டபிரதேசங்களில் வளரக்கூடியதொரு மரமாகும். பனைமரமென்பது மரம் போன்றதொரு அமைப்பிலே தெரிந்தாலும்கூட அது உண்மையில் ஒரு புல்லினத்தினைச் சார்ந்த தாவர இனமாகவே கருதப்படுகின்றது. பொதுவாக இது பயிரிடப்படுவதில்லை. தானாகவே வளருகின்ற இயல்பினை உடையது. இதனது சிறிய தோற்றமானது வடலி என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது. ஒரு பனையானது முதிர்ச்சியடைய ஏறத்தாள இருபது வருடங்களாவது செல்லும். (கணபதிப்பிளளை,க.,1962, ப.125) இதனது வயதானது மனிதர்களுடைய சராசரி வயதிலும் பார்க்க அதிகமானதென்பது குறிப்பிடத்தக்கது. இவை குறிப்பிடத்தக்க வளைவுகள் எவையமின்றி சுமார் 30 மீற்றர்கள் வரை வளருகின்ற இயல்பினை உடையதாகும். கிளைகள் இவற்றுக்கு கிடையாது. உச்சிப் பகுதியில் ஏறத்தாள 30-40 மீற்றர்கள் வரை விசிறி வடிவமான ஓலைகள் வட்ட வடிவத்தில் காணப்படுவது இதனது சிறப்பாகும். பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும்.

வடஇலங்கை மண் பெற்றுள்ள இயற்கைச் செல்வங்களுள் பனைச் செல்வமானது சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளதென்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. அராபிய நாட்டவர்களுக்கு எப்படி பேரிச்சம்பழம் பிரயோசனமாக இருக்கின்றதோ அவ்வாறே இப்பகுதி மக்களுக்குப் பனையும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களும் அமைகின்றன.(குலரத்தினம்,கா.சி., 1977,ப.07) பெண்ணை,தாலம், தாளி, தாளிப்புல், கற்பகதரு, ஏடகம்,துருமேகம்,நீலம், பாரிபத்திரம், காமபுரம், தரும விசாரன், கரும்புறம்,போந்து, புல்லூதிபம், போந்தை, புற்பதி, தாலம் போன்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்ற பனையினைச் சிலர் வற்றாத புதையில் என்றே கூறுவர். பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம் என்ற பழமொழியானது தமிழ் மக்களினால் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பழமொழியாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (Pieris,P.E.1995,p.27)

உணவுப் பொருட்களாகவும் சிறு கைத்தொழிற் ரெட்களாகவும் பயன்டுகின்ற அதேவேளை பனையினது பாகங்கள் மருத்துவ குணங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. யானைத் தந்தம், பனம் பழம், பனம் விதை என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. இயற்கை மருத்துவத்தில் வழங்கப்படுகின்ற மருந்து வகைகளை குறிப்பாக உள்ளெடுக்கின்ற மருந்துகளைப் பால்,தேன், நீர், முலைப்பால், வெற்றிலைச்சாறு, பனையினது வெல்லம்போன்ற அனுபானப்பொருட்களுடன் சேர்த்து உள்ளெடுப்பது தற்காலம் வரை வடஇலங்கையின் சில பகுதிகளில் இருந்து வருகின்றது. (விசாகரூபன்,கி., 2004, ப.106) மேலும் புற்றுநோய்க்கான மருந்துகளிலொன்றாகவும்கூட பனற்கற்கண்டானது ஏலக்காய், கரட் சாற்றடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்றமை நோக்கத்தக்கது. (மரகதவல்லி,அ.,2016.,ப.1140) மேலும் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், உடல் சூட்டினைக் குறைத்தல், மலசிக்கலைத் தடுத்தல் போன்ற பல மருத்தவக் குணங்கள் இதற்கு உள்ளது.

இதனது தோற்ற காலந் தொடர்பாக அறிஞர்களிடையிலே முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக்கள் எவையும் அதனது தோற்ற காலத்தினையோ அல்லது அவை எங்கு முதலில் தோன்றியது என்பது பற்றியோ உறுதியான கருத்துக்களாக அமையவில்லை. பனையினது வரலாற்றினை ஆராய்ந்த தாவரவியலாளர்களும் வரலாற்றாசிரியர்களும் இதனது தோற்ற காலத்தினைக் கணிப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு இம்மரத்தினை மிகவும் தொன்மையானதாகக் கருதுகின்றனர். அவர்களில் சிலர் இம்மரமானது முதலில் ஆபிரிக்காவிலேதான் தோன்றியதாகவும் பின்னர்தான் ஆசிய நாடுகளுக்கும் பரவியதாகக் கூறுவர்.(பாக்கியநாதன்,மு.,2003,ப.17) ஆபிரிக்காவிலிருந்து இம்மரமானது இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும் பின்னர் அங்கிருந்துதான் இலங்கை உட்பட பிற ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். காரணம் பண்பாட்டுப்பரவலென்பது அங்கிருந்துதான் இலங்கைக்குக் பரவியதாக வரலாற்றில் சில கருத்துக்கள் உள்ளன. 1979இல் லியூபெயிற் என்பவர் பனையினை இந்தியாவிற்கே உரிய மூலமான தாவரமாக அடையாளங் காணுகின்றார். மகாராஸ்ர மாநிலப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த

அறிஞரான மகாபல் என்பவர் பனை மரத்தினது பாறைகளை ஆய்வு செய்து இது பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்டதாகக் கூறுகின்றார்.(சம்பந்தம்,கே.,1966,ப.01)

பனையென்பது வடஇலங்கையின் சுதேச வளங்களிலொன்றாக பெருங்கற்காலப் பண்பாட்டுக்காலத்துடன்தான் முதன் முதலாக் அடையாளங் காணப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாங்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களைச் சுடுவதற்கு இம்மரத்தினது பாகங்களையே விறகாகப் பயன்படுத்தியதாகப் பேராசிரியர் செ.கிருஸ்ணராசா அவர்கள் கந்தரோடையில் எரிந்த நிலையில் காணப்பட்ட அப்பாகத்தினது எச்சத்தினை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிடுகின்றார்.(கிருஸ்ணராசா,செ.,நேர்காணல்)அதாவது கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சியின் விளைவாக அங்கிருந்த அடிமண்படை அடுக்கிலிருந்து இத்தகைய எச்சமானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காலத்திற்குரிய பண்பாட்டு மக்கள் சமகாலத்தில் ஆனைக்கோட்டையிலும் புத்தளம் போன்ற பகுதிகளிலும் வாழ்ந்திருப்பதனால் அப்பகுதிகளிலும் பனையினது பயன்பாடு இருந்திருக்கலாம். இலங்கையில் இத்தகைய பெருங்கற்காலமானது கி.மு.எட்டாம் நூற்றாண்டாகவும் தென்னிந்தியாவில் இக்காலமானது கி.மு. பத்தாம் நூற்றாண்டாகவும் அடையாளங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்படியாயின் பனை மரத்தினது செல்வாக்கானது கி.மு.எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வடஇலங்கையில் இருந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இலங்கையின் வரலாற்றினை எடுத்துக்காட்டுகின்ற வரலாற்று நூல்களிலொன்றான மகாவம்சத்தில் பனை தொடர்பான குறிப்புக்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. (மகாவம்சம்,அத்.10,17,செய்.89,44))அப்படியாயின் மகாவம்சத்தினது தோற்ற காலத்திற்கு முன்னதாகவே(கி.பி.06) பனையினைப் பற்றி ஈழத்தவர் அறிந்திருந்தமை இதிலிருந்து தெளிவாகின்றது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட குறிப்புக்கள் பனை ஓலையிலேதான் எழுதப்பட்டிருந்தன. வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் பலரும் ஓலைச்சுவடியினது பயன்பாடானது கி.மு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே வழக்கிலிருந்ததாகக் கூறுவர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னராக குறிப்புக்களை எழுதவதற்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பனை மரத்தினை எடுத்துச் சென்றமைக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலே சங்ககாலத்தேய தமிழ் இலக்கியங்களில் பனை தொடர்பான குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக புறநானூறு மற்றும் நெடுநல்வாடையினைக் குறிப்பிடலாம். இன்னும் தேவாரங்கள். சிற்றிலக்கியங்கள். காவியங்கள் என்பனவற்றிலும்கூடப் பனை தொடர்பான குறிப்புக்களைக் காணலாம். அவற்றில் பல இடங்களில் பாண்டிய நாடானது பனைக்குப் புகழ் பெற்றிருந்ததனை இனங்காண முடிகின்றது. மூவேந்தருள் சேர மன்னரும் வீரர்களில் பலராமரும் ஞானியருள் பீஸ்மரும் பனையினை மதித்து அவற்றினை மாலையாகவும் கொடியாகவும் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (குலரத்தினம்,கா.சி.,1977,ப.08) மேலும் மன்னர்களது தசாங்களில்கூட பனையானது சிறப்புடன் விளங்கியிருந்தமையினைக் காணலாம். திருக்குறளிலும் பனை தொடர்பானகுறிப்புக்கள் முப்பாலிலும் உள்ளன.(குறள்கள்,104,433,1282)

பல்லவர் காலத்திலிருந்து (கி.பி.6) பனை மரமானது தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக இருந்துவந்ததனை அவதானிக்க முடிகின்ற அதேநேரத்தில் இக்காலப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திலும் இதனது முக்கியத்துவமானது அதிகரித்து வந்துள்ளது. பெண்கள் அணிகின்ற தோட்டினைக் காதோலை என்றழைக்கின்ற வழக்கமானது இரு தேசங்களிலும் இக்காலப் பகுதியிலிருந்துதான் புகழ்பெற ஆரம்பிக்கின்றது. பனம் பொருட்கள் இரு தேங்களுக்கிடை டையிலும் பரிமாறப்பட்டிருந்தன.

தொடர்ந்துவந்த சோழருடைய காலத்திலிருந்து வடஇலங்கையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்களை தமிழகம் பெற்ற வரலாறு பற்றிய தகவலை தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் காணலாம்.சோழரது வணிககணங்கள் இவ்விடயமாக முக்கியத்துவம் பெற்றிருந்தன.(Gunasinhe,P.A.,2007.P.110) திருஞானசம்பந்தருடைய காலத்தில் பனந்தோப்புக்கள் தனித்தோட்டங்களாக மிளிர்ந்தன. திருமூலர் தனது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் பனையின் சிறப்பினைப் பாடியுள்ளார். பெரும்பாலான நாயன்மார்களது வாழ்வுக்காலமானது பல்லவர், சோழரது காலப்பகுதிகளுக்குள் உட்படிருப்பதனாலும் அவர்களது பதிகங்களில் பனை பற்றிய குறிப்புக்கள் இருப்பதனாலும் இரு நாடுகளும் தொடர்புகள் நீண்டகாலமாக வைத்திருந்தமையின் பின்னணியிலும் இவர்களது காலங்களில் வடஇலங்கையில் பனை ஆதரிக்கப்பட்டு இவர்களால் அத போற்றப்பட்டிருக்கலாம். ஆனால் குறிப்புக்கள் கிடைக்கவில்லை. அதுமட்டுமன்றி கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் சோழர்களது செல்வாக்கானது தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட சமயத்தில் அங்கு பனை மரக்கலாசாரம் அவர்களினால் பரப்பப்பட்டிருக்க வேண்டும். உணவுத் தேவைக்காகவும் சுவடி எழுதுவதற்காகவும் அங்கே இவை கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். விஜயநகரப் பேரரசு காலத்திலும் யாழ்ப்பாணத்தினது பனம் பொருட்கள் தென்னிந்தியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணஅரசு காலம்**

வடஇலங்கையில் யாழ்ப்பாண இராச்சியத்தினது தோற்ற காலந் தொடர்பான முரண்பட்ட கருத்துக்கள் சிங்கள, தமிழ் வரலாற்று ஆசிரியர்களிடம் காணப்பட்டாலும்கூடப் பொதுவாக இதனது தோற்ற காலத்தினைப் பலரும் கி.பி 13ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பிப்பர். ஆரம்பகாலங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்கள் சிங்கையாரியன் குலத்தினைச் சேர்ந்தவர்களென்பதனை யாழ்ப்பாணத்தரசர்களது ஆட்சிக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் சாசனங்களும் எடுத்துரைக்கின்றன. பொதுவாகச் சொல்லப்போனால் ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பின் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளது

ஆட்சியேற்பட்டதெனலாம் (பத்ம நாதன்,சி.,2011,பக்.100-112).தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்திற்குரிய நிர்வாகமுறைகளும்கூட அவர்களாலேயே உருவாக்கப்பட்டது.

இக்காலப்பகுதிக்குரிய வடஇலங்கையினது பொருளாதார நடவடிக்கைகள் பற்றி அறிவதற்கு அக்காலப்பகுதிக்குரிய இலக்கியங்களும் போர்த்துக்கேயர்கால ஆவணங்களும் பிரதான ஆதாரங்களாக உள்ளன. விவசாயமும் மீன் பிடித்தொழிலும் பிரதான இடத்திலிருந்தாலும்கூட உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளும் சிறப்புப் பெற்றிருந்தன. ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, மாதோட்டம், அரிப்பு, கச்சாய், முல்லைத்தீவு போன்ற துறைமுகங்கள் இவர்களது வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் பெருமளவிற்கு உதவி செய்தன. அவ்வகையில் இவற்றினுடாகவே இலங்கையின் கிழக்குப் பகுதிகள், தென்னிலங்கை, வன்னி மற்றும் தென்னிந்தியப் பகுதிகளுடன் யாழ்ப்பாண அரசர்கள் வர்த்தக உறவினைப் பேணியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இத்தகைய துறைமுகங்கள் தனியே யாழ்ப்பாண அரச்ரகளது தேவைகளுக்கு மட்டுமன்றிக் கண்டி இராச்சியமானது இவற்றினைப் பயன்படுத்தி தென்னிந்தியாவுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நித்தியானந்தம்,வி.,2033).

இக்காலப்பகுதியில் உள்நாட்டவரது தேவைகளுக்கு மட்டுமன்றி நாட்டின் பிற பகுதிகளுக்கும் ஏன் தென்னிந்தியாவினுடைய தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற நோக்குடன் பனம் பண்டங்கள் வடஇலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டன. இவை மக்களது அன்றாட வாழ்வில் குறைந்தது ஒருநேர உணவுத் தேவையினையாவது பூர்த்தி செய்கின்ற வகையில் காணப்பட்டது. பனங்களியாகவும் பனாட்டு, பணியாரம் போன்ற உணவுப் பொருட்களாகவும் இவை மக்களது தேவையினை நிறைவு செய்தன. பனையும் பனம் பொருட்களும் மக்களது வாழ்விற்கு ஆதாரமாக விளங்கியதன் பின்னணியில் யாழ்ப்பாணத்தில் இது சார்ந்த பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. மரத்தினது பிற பாகங்களைப் பயன்படுத்திக்குடிசைக் கைத்தொழிலிலும் ஈடுபட்டுப் பலர் வருவாயினைப் பெற்றனர். (Arasaratnam,S.,1982, p.06). அக்காலப்பகுதியில் பனை மரத்தினைத் துலாவாகப் பாவித்து விவசாயத்திற்குத் தேவையான நீரினை வடஇலங்கை மக்கள் பெற்றனர். (பத்மநாதன்,சி.,2011,ப.148)

யாழ்ப்பாண அரசு நிலவிய காலத்தில் நெசவு மற்றும் சாயக்கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் போன்றன விருத்தியடைந்த சூழலில் அதன் பொருட்டுத் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் தருவிக்கப்பட்டிருந்தனர். அப்படியாயின் பனைத் தொடர்பான சல கைத்தொழில்களும் சமகாலத்தில் சிறப்புப் பெற்றிருந்தமையினால் இதன் பொருட்டும் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இது பற்றிய குறிப்பக்கள் எவையும் கிடைக்கவில்லை. இக்காலப்பகுதியில் வர்த்தக அடிப்படையில் இலங்கையின் வடபகுதிக்கும் தென்னிந்தியப் பகுதிகளுக்குமிடைலே நெருக்கமான உறவு இருந்துவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மலையாளம். சோழமண்டலக்கரை என்பனவற்றுடன் வடஇலங்கை கொண்டிருந்த வர்த்தக உறவானது இக்காலப்பகுதியில் வடஇலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருந்ததெனலாம்

அவ்வகையில் நாட்டினது தேவைக்குமேலதிகமாக இவை உற்பத்தி செய்யப்பட்டதனால் தென்னிலங்கை, கிழக்குப் பகுதிகளுக்கு மட்டுமன்றிச் சோழமண்டலத்திற்கும் தென்னிலங்கைக்கும்கூட அனுப்பி வைக்கப்பட்டன. (கிருஸ்ணராஜா,செ.,2002, ப.59) இவற்றில் பனங்கட்டி, பனாட்டு, பணியாரம், ஒடியல் என்பன குறிப்பிடத்தக்கன. சில சந்தர்ப்பங்களில் பனை மரமாகவும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. மேலும் வீட்டுப் பாவனை மற்றும் விவசாயதின் பொருட்டும் பனையினது ஓலையினால் செய்யப்பட்ட பாய், கடகம் போன்ற பொருட்களையும் வடஇலங்கை மக்கள் தென்னிந்தியாவில் விற்றனர். பின்னர் அங்கிருந்து தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, புடவை போன்றவற்றினை எடுத்துவந்தனர;.(Ferguson,D.,1998,p.67) இவை எல்லாவற்றினையும்விட உறுதியான வீடுகளை அமைக்கவும் பாதுகாப்பு அரண்களுக்காகவும் வைரமான இம்மரங்கள் பயன்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாண அரசு காலத்தில் உறவினர் வீடுகளுக்குச் செல்பவர்கள் கொண்டு செல்கின்ற பலகாரங்களில் பிரதான இடத்தினைப் பெறுவது பனம் பண்டங்களே. திருமணம் மற்றும் பிரதான கொண்டாட்டங்களின்போதும் கண்டிப்பாகஇவை கிராமப் புறங்களில் உள்ள வீடுகளில் சபையில் இடம்பெறும். இவ்வழமை தொடர்ந்து ஐரோப்பியர்களது காலத்திலும் காணப்பட்டது.

**ஐரோப்பியர்களது காலம் (1619-1945)**

போர்த்துக்கேயரைப் பொறுத்தவரை அவர்கள் வடஇலங்கையில் தமது நிர்வாகத்தினை நேரடியாக ஏறத்தாள அரை நூற்றாண்டு காலமே ஏற்படுத்தயிருந்தனர். ஆனால் டச்சுக்காரரது செல்வாக்கானது வடஇலங்கையில் ஏறத்தாள ஒன்றரை நூற்றாண்டுகாலம் நீடித்திருந்தது. (Silva,K.M.De.,1981,P.410)ஆங்கிலேயர் அதற்கு அப்பால் சென்று நாடு முழுவதனையும் சொந்தமாக்கிச் சென்றனர். இவர்கள் மூவரதும் முக்கியமான நோக்கமானது நாட்டினது பொருளாதாரத்தினைச் சுரண்டுவதே. இவர்களில் முன்னிருவரும் பின்வந்தவரை இவ்விடயமாக வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள்மீது மோசமான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். போர்த்துக்கேயரைப் பொறுத்தவரை அவர்கள் தமது காலத்தின் பெரும் பகுதியினைப் போர்களிலே செலவழிப்பவர்களாகவே காணப்பட்டனர். குறிப்பாக கண்டியைக் கைப்பற்றுவதற்கான போர்களில் தமது காலத்தினை வீணடித்து வந்தனர். இதனால் அவர்களால் ஒரு திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கையொன்றினைப் பின்பற்ற முடியவில்லை.கிடைத்ததனைச் சுருட்டிக் கொண்டனர். டச்சுக்காரரரைப் பொறுத்தவரை அவர்கள் போரினைக்

குறைத்து சமாதானத்தினை ஏற்படுத்துவதன் மூலமாகவே பொருளாதார பலத்தினைப் பெருக்கலாமென்ற சிந்தனையினைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

போர்த்துக்கேயரது காலத்தில் வடஇலங்கையில் ஏற்கனவே நடைமுறையிலிருந்துவந்த பொருளாதாரக் கட்டமைப்பில் அவர்கள் மாற்றங்கள் எவற்றினையும் ஏற்படுத்தவில்லை. அவர்கள் செல்வாக்கு இப்பகுதிகளில் குறைந்தளவு காலமே காணப்பட்டதன் பின்னணியில் அப்பகுதிகளில் மாற்றங்கள் எவற்றினையும் துணிந்து மேற்கொள்ளவில்லை. பனம் பொருட்களின் உற்பத்தியும் அவற்றினது பாவனையும் வர்த்தகமும் சுதேச மக்களது கைகளலேதான் காணப்பட்டன. பிற விடயங்களில் குறிப்பாகமுத்து வர்த்தகம், யானை வர்த்தகம் போன்றவற்றில் தலையிட்ட இவர்கள் பனம் பொருட்களது அருமையினை உணராதவர்களாகவே காணப்பட்டனர். (சிவசாமி, வி.,2014, 128) அதனால் கிடைக்கக்கூடிய வருவாயினையும் கவனிக்கவில்லை. இருப்பினும் தமது ஆட்சிக் காலத்தின் இறுதியில் இவற்றின் மூலமாகக் கிடைக்கக்கூடிய வருவாயினை உணர தவறவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது.

போர்த்துக்கேயராயினும் சரி அல்லது டச்சக்காரர் ஆயினம் சரி தொடர்ந்துவந்த ஆங்கிலேயரானாலும் அவர்கள் அனைவருமே பனைமரத்தினைச்“சீனி மரம்” என்றே அழைத்தனர். (பாக்கியநாதன்,மு.,2003,ப.16) அவ்வகையில் இவர்கள் சீனியினை அடிப்படையாகக்கொண்டே பனையினைப் பற்றி அறிந்தவர்களாகக் காணப்பட்டனர். இன்றும் கம்போடிய நாட்டில் இது “சீனிபாம்“ என்றே அழைக்கப்படுகின்றது.வழமை போன்றே உள்நாட்டிலும் கடல் கடந்து தென்னிந்தியப் பகுதிகளிலும் வடஇலங்கையினது பனம் பொருட்களுக்கு மதிப்பு இருந்தது. அதாவது வடஇலங்கை மக்களது பொருளாதாரத்தில் பனையினதும் அதனது பொருட்களுக்கும் தொடர்ந்தும் முக்கியத்துவம் இருந்தே வந்தது.பனம் பொருட்களை விற்று மலையாளம் மற்றும் சோழமண்டலக் கரையிலிருந்து இவர்கள் இங்கு தட்டுப்பாடான பொருட்களைப் பெற்று வந்தனர். பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, செம்பு போன்ற உலோகங்களையும்கூட இவர்கள் அங்கிருந்தே பெற்றனர். வேப்பெண்ணை, இலுப்பெண்ணை, தேங்காய், தேங்காயெண்ணை என்பனவும் வடஇலங்கையர்களது முக்கியமான விற்பனைப் பொருட்களாகக் காணப்பட்டன. அத்துடன் பருத்தி, சாயவேர், நெசவு, புகையிலை, சங்கு, நெசவு போன்றனவும் இக்காலப் பகுதியிலும் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன.

டச்சுக்காரரைப் பொறுத்தவரை அவர்களது காலத்தில்தான் பனை மரத்தினது அவசியம் அவர்களால் அறியப்பட்டு வேறெந்த ஐரோப்பியரது காலத்திலும் கொடுக்கப்படாத முக்கியத்துவமும் அதற்குக் கொடுக்கப்பட்டது. பனையினது பாகங்கள் அனைத்தும் தேவைக்கேற்றபடி பயன்படுத்தப்பட்டன. அவர்களது பனை தொடர்பான சிந்தனைகளின் பின்னணியிலேதான் வடஇலங்கை மக்களும் பனை தொடர்பான உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் மறுபடியும் ஆர்வத்தினைச் செலுத்த ஆரம்பித்தனரெனலாம். மீளவும் அவர்களுடன் இணைந்த வகையில் வருவாயினையும் இவர்கள் அதிகளவில் பெற ஆரம்பித்தனரெனலாம். பல்லவர் காலத்திற்குப் பின்னதாகப் பனையினது முக்கியத்துவமானது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அதிகரிக்க ஆரம்பித்தது டச்சக்காரரது காலமே. டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த சமயத்தில் அவர்கள் பனையினையே யாழ்ப்பாணத்திற்குரிய சின்னமாகப் பயன்படுத்தியிருந்தனர். யாழ்ப்பாணத்திற்கான கொடியிலும்கூட பனையே அவர்களது காலத்தில் சின்னமாகக் காணப்பட்டது. (Ferguson,D., 1998,p.47)வடஇலங்கை மக்கள் பனையிலிருந்து ஊமல், கரி போன்றனவற்றினையும் பெற்றனர். டச்சுக்கிழக்கிந்தியக் கம்பனியின் பணியாளர்களுக்கு கோழி, செம்மறியாடு, பால், தயிர், வாழைப்பழம், வெற்றிலை போன்றவற்றினையும் விற்பனை செய்து இலாபம் பெற்றனர். இதனால் டச்சுக்காரர்களது காலத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இவர்களுக்குக் கிட்டியதெனலாம்.

டச்சுக்காரரது காலத்தில் அவர்களும் போர்த்துக்கேயரைப் போன்றே துறைமுகங்கள் ஒவ்வொன்றக்கும் அண்மையில் கோட்டைகளை அமைத்திருந்தனர். இவை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்பட்டவைகளாகவே அதிகளவில் இருந்தன. இவற்றில் சிலவற்றினைத் டச்சுக்காரர் தமது நடவடிக்கைகளுக்கும் அடையாளத்திற்கும் ஏற்றவகையில் மாற்றியிருந்தனர். அவற்றில் ஊர்காவற்றறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, கச்சாய், பூநகரி, அரிப்பு, இலுப்பைக்கடவை என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறையில் அமைந்துள்ள துறைமுகங்கள் பெரிதாக இருந்தமையினால் அங்கிருந்த கோட்டைகளில் வைத்தே பயணம் செய்வோருக்கான நுழைவுச் சீட்டுக்கள் கொடுக்கப்பட்டன. கொழும்புத்துறை மற்றும் கச்சாய் துறைமுகங்கள் வன்னிக்கான போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதெனலாம். பருத்தித்துறையில் உள்ள கோட்டையே சோழமணடலம் மற்றும் திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்தில் பிரதான பங்கினை வகித்திருந்தது.(Dairyof Jan Schreuder,535)இங்கிருந்த காலாற்படைத் தலைவனே இப்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றபனை மரங்கள் தொடர்பான விபரங்க்ளைக் கண்காணிப்பவராக விளங்கினார். (கணபதிப்பிள்ளை,க.,2006,ப.129) இவ்விடத்தில் குறிப்பிடத்தகதொரு விடயம் யாதெனில் எக்காலத்திலுமில்லாதவாறு டச்சுக்காரர் காலத்தில்தான் அதிகளவான பனை மரக்குற்றிகள் பல்வேறுதேவைகளின் நிமித்தமாக இந்தியாவிற்கு ஏற்றுமதியானது. உண்மையில் இந்தியாவில் பனைகளின் தொகையானது வடஇலங்கையில் காணப்பட்ட பனைகளது எண்ணிக்கையிலும் அதிகமாக இருந்தபோதும் இலங்கையிலிருந்த பனைகளும் பனம் பண்டங்களுமே அந்நாட்டவர்களினால் விரும்பி வாங்கப்பட்டன.

டச்சுக்காரரது உள்ளுர் மற்றும் வெளியூர் வர்த்தக நடவடிக்கைகளில் பனை மரமானது பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. பனையினது முக்கியத்துவத்தினை உணர்ந்த இவர்கள் சோற்றுக்குப் பதிலாகப் பனம் பழத்தினைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். அதுமட்டுமன்றி பனங்கட்டி, பனாட்டு, பனங்கிழங்கு, பாய், ஓலை போன்றனவற்றினை இவர்கள் பனையிலிருந்து பெற்றனர். பனை மரத்திலிருந்து கட்டங்கள் கட்டுவதற்கான வளை, கப்பு, கைமரம் போன்றனவற்றினையும் செய்தனர்.(கணபதிப்பிள்ளை,க.,2006,ப.129) பனை மரங்களைவிடப் பல பனம் பொருட்கள் தனியாரால் ஏற்றுமதிக்கென விற்பனை செய்யப்பட்டன. பனங்காய், பனாட்டு, பனங்கட்டி,

பனங்கிழங்கு, நார்வடம், பாய், கடகம், ஓலை போன்றவற்றினை சோழமண்டலத்திலும் தொண்டைமண்டலத்திலும் விற்பனை செய்தனர். (நித்தியானந்தம்,வி.,2003, ப.31) உண்மையில் இலங்கையும் தென்னிந்தியாவும் ஆதிகாலம் தொட்டே ஒரு வர்த்தக வலயமாக இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நித்தியானந்தம்,வி.,2003,ப.28) திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும்கூட மேற்கூறப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்து வருவாய் பெற்றனர். குறிப்பாக வடஇலங்கையினது பனம் பொருட்களுக்கு கிழக்கிலும் வன்னிப் பகுதிகளிலும் கிராக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஈழகேசரி, 1931ஜனவரி12, ப.03)

தென்னிந்தியாவில் நாகபட்டினத்திலும் கொழும்பிலும் அரசாங்கத்திற்குத் தேவைப்பட்ட பனை மரங்களை குறிக்கப்பட்ட பணத்தினைச் செலுத்தி வடஇலங்கையிலேயே அவற்றினைப்பெற்றனர். அரசாங்கத்திற்கு எப்போதெல்லாம் பனை மரங்கள் தேவைப்படுகின்றனவோ அப்போதெல்லாம் அரசாங்கத்திற்கு இப்பகுதி மக்கள் பனை மரங்களை ஒப்படைத்தல் அவசியமாக இருந்தது. சில சந்தர்ப்பங்களில் டச்சு அரசாங்க உத்தியோகத்தர்களும் தமக்குத் தேவைப்பட்டபோதெல்லாம் பனையினைத் தறித்துச் சென்றனர். இதனால் வடஇலங்கையில் பனை மரங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்தவர்களுக்குப் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. மரங்களைத் தறித்துக் கொடுப்பதுடன் மட்டும் அவர்களது வேலை முடிவிற்கு வரவில்லை. அவற்றினைத் தேவைக்கு ஏற்றபடி துண்டாடிச் சில மைல்கள் தூரம் எடுத்துச்சென்று அவர்கள் அவற்றினைத் துறைமுகங்களில் ஒப்படைத்தல் வேண்டும். தோப்பிலே உள்ள மரங்களுக்கும் வரிகளைடச்சுக்காரருக்கு செலுத்துதல் வேண்டும். (னுயசைல ழுக துயமெ ளுஉாசநரனநசஇ535) வடஇலங்கையினைப் பொறுத்தவரை எப்பொழும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்துகொண்டே வந்தது. டச்சுக்காரரது ஆட்சியிலும் இது தொடர்ந்தது. இதனால் இத்தகைய பனம் பொருட்களை ஏற்றமதி செய்து அரிசி, நெல், என்பனவற்றுடன் துணி வகைகளையும் வடஇலங்கையர்பெற்றனர். மேலும் இவ்வியாபாரத்தில் முஸ்லிம்களே நேரடியாக ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

வடஇலங்கையில் பனை மரங்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளில் பதநீர் எடுக்கின்ற பழக்கம் காணப்பட்டது. இத்தகைய பதநீர் பற்றி சங்ககால இலக்கியங்களில் குறிப்புக்கள் இருப்பதனைப் பற்றி எற்கனவே ஒரு இடத்தில் பார்த்துள்ளோம். இக்கைத்தொழில் டச்சுக்காரரது காலத்தில் அவர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கப்பட்டது. இதன் பொருட்டு வடமராட்சியில் டச்சுக்காரர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனை வெல்லக்கட்டித் தொழிற்சாலை ஆங்கிலேயராட்சிக்காலம் வரை தொடர்ந்து இயங்கியது. கேரளாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஈழவர்கள் மூலமாகவே பனையிலிருந்து பதநீர் சேகரிக்கப்பட்டது. தற்போதுவரை இத்தொழிற்சாலையின் எச்சங்கள் காணப்படுகின்றன. முறைக் கருப்பநீர் என்ற சொற் பிரயோகமானது இற்றைவரைக்கும் வடமராட்சிப் பிரதேசத்தில் வழக்கிலிருந்து வருவதாக மேலும் அவர் தொடர்ந்து கூறுகின்றார். இதனது கருத்து யாதெனில் பனங்காணியினுடைய சொந்தக்காரனும் பதநீர் வடிக்கின்ற தொழிற்சாலையினை வைத்திருப்பவனும் பெற்றுக்கொள்ளுகின்ற பதநீரினையே இது குறிக்கின்றது. (கிருஸ்ணராஜா,செ.,2000,ப.292) இதன் பொருட்டுக் கடற்கரையில் சுண்ணாம்புச் சூழையினை வைத்து சுண்ணாம்புப் பொடி தயாரிக்கும் தொழிற்திறனைக்கூட டச்சக்காரர் வடஇலங்கை மக்களுக்கு வழங்கியிருந்தனர்.

டச்சுக்காரருடைய காலத்தில் இலங்கைமக்களது மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக்கொண்டு தேசவழமை உருவாக்கப்பட்டது. இது 1707இல் அரசாங்கத்தினால் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதில் ஒரு இடத்தில் வடஇலங்கைப் பனை மரங்கள் தொடர்பான ஆட்சி பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு,

*“காணி ஒருவனுடையதாக இருக்க அதில் நிற்கின்ற முதுபனைகள் வேறொருவனுக்கு உடையதுகளாயிருந்தாலும் கீழ்ப்பட்ட வடலிகள் நிலக்காரனுக்கேயன்றி அம்முதுபனைக்காரனுக்காக மாட்டது. இது காரியத்துக்கு அராலியென்கிற குறிச்சி மாத்திரம் புறநீங்கல்.அவ்விடத்திலே ஒரு பழைய வழமை நடந்துவருகிறது. அதென்னவென்றால் அந்த முதுபனைக்குடையவர்களாய் இருக்கிறவர்கள் அவைகளின் கீழ்ப்பட்ட வடலிகளையும் பிடித்து ஆண்டு வருவார்கள். அந்த ஊரிலே வடலி வெகுத்த மில்லாததற்கு நியாயமிதுவே. ஏனென்றால் விழுபனங்காய் எடாமல் விட்டிருந்த இடங்களிலே முளைத்த வடலியுண்டான காலத்திலும் அந்தக் காணிக்குடையவன் காணி செய்கிற போகத்திற்கு வந்து நிலத்தை உழுது புரட்டி அந்த முளைகளைப் பாழாக்கி விடுவான். அதென்னவென்றால் தன்னுடைய நிலத்திலே மறுபேருடைய பனை உண்டாகாத படிக்கத்தான். தென்மராட்சிப் பகுதியிலும் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும் நடந்துவருகின்ற வழமையாவது நிலம் நீங்கலாகப் பனை மரங்கள் மாத்திரம் கொம்பனியாரின் தோம்பிலே எழுதப்பட்டிருந்தமையினால் அந்த முதுபனை மரக்காரனுக்கே கீழ் வடலிகளும் உடையவைகளாம். ஆனால் நிலமும் முதுபனைகளும் தோம்பிலே எழுதப்பட்டு அவைகளுக்காகக் கடமை இறுத்தவந்தால் அப்போது கீழ் வடலிகள் நிலக்காரனுக்குஉடையவைகள்“*(பத்மநாதன்.சி.,2002,ப.203)

ஆங்கிலேயரது காலத்திலும் பனம் பொருட்களது முக்கியத்துவம் பொருளாதார அடிப்படையில் வடஇலங்கையில் அதிகரித்திருந்தது. பனை மரக்குற்றிகள் தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்டுத் தேவையான அரிசி அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. (ஏகநாயகவல்லி,சி.,2003,ப.162) பனம் பொருட்களது உற்பத்திகளும் நடைபெற்றன. இவற்றின் மூலமாக மக்களும் தனிப்பட்ட ரீதியில் வருவாயினைப் பெற்றனர். ஆங்கிலேயரது காலத்தில் சோமசுந்தரப்புலவர் போன்ற புலவர்களும் சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த உதயதாரகை,ஈழகேசரி போன்ற பத்திரிகைகளும் பனையினது மகத்துவத்தினை அக்கால மக்களுக்கு உணரச் செய்தன. முதலாம், இரண்டாம் உலகமகாயுத்த காலப்பகுதிகளில் இறக்குமதிகள் தடைப்பட்ட நிலையில் வடஇலங்கையருக்குப் பிரதான உணவாகக் காணப்பட்டது பனையினது பொருட்களே. அச்சமயத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்கியது அதனது பாகங்களே. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடஇலங்கையில் தும்புத்தொழிற்சாலையொன்றினை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ஆங்கிலேய அதிகாரிகள் ஈடுபட்டதனை அவதானிக்க முடிகின்றது. (Martyn,H.,1923,P.250) இருப்பினும் பனையுடன் தொடர்பான தொழில்களை

மேற்கொள்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்தவர்களென்ற எண்ணம் பலருக்கு இருந்துவந்தமையின் பின்னணியில்தான் இத்தொழிலில் வசதிகள் பல இருந்தும் துணிந்து மக்கள் ஈடுபடாமைமைக்கான காரணங்களிலொன்றாகக் கருதலாம்.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னராக மகாத்மா காந்தியினது ஒவ்வொரு பிறந்த நாளையும் இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையானது பனை மகோற்சவமாகக் கொண்டாடுகின்ற வழக்கத்தினை வடஇலங்கையில் கொண்டிருந்தது. அதன்போது பனை இனங்களைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் இச்சபையினால் முன்னெடுக்கப்பட்டன. அதிலொன்றாகவே 10000பனம் விதைகள் மக்களுக்கு வழங்கப்பட்டது.(ஈழகேசரி,1953.09.20,ப.02) மேலும் ஒவ்வொருவரும்10 பனம் விதைகளையாவது நாட்ட வேண்டுமெனவும் பனை உணவுகளைச் சேர்த்தும் தனித்தும் உண்ணுதல் வேண்டும் எனவும் பனைகளைத் தறிக்கக்கூடாதெனவும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பனைமகோற்ச நாளன்று பனை தொடர்பான பொது அறிவுப் போட்டிகள்கூட நடைபெற்றன. (ஈழகேசரி,1956.11.18,ப.05) அக்காலப்பகுதியில் பனம் பொருட்களுக்கான பொருட்காட்சிகள்கூட நடைபெற்றன.

1950களில் கல்லோயாப் பகுதியில் வீடுகளை அமைப்பதற்குத் தேவைப்பட்ட பனை மரங்கள் வடஇலங்கையிலிருந்தே தறித்தெடுத்துக்கொண்டு செல்லப்பட்டன. இதனைக் கண்டிக்கின்ற ஆய்வாளர்களும் பனை மரங்களின் அவசியத்தினை அவ்வப்போது மக்களுக்கு எடுத்துக்கூறி வந்தனர். (ஈழகேசரி, 1951.09.02, ப.01) இம்முயற்சியானது தற்காலத்திலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மிக அண்மையில் 24000 பனைகள் வடஇலங்கையிலுள்ளயாழ்ப்பாணத்தில் சட்டரீதியாகத் தறிக்கப்பட்டதாக அதனது அரசஅதிபரது செய்திக் குறிப்பில் காணப்படுகின்றது. (உதயன்,2016.10.2016,ப.22) தற்போது பனை அபிவிருத்திச்சபையானது பனையினை நம்பி வாழுகின்ற சமூகத்தின் அபிவிருத்தியினை நோக்கமாகக்கொண்டு மூலதன நீதிமூலமும் அமைச்சின் வாழ்வாதார நிதி மூலமும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கண்காட்சி மற்றும் ஆய்வரங்குகளையும் இவ்விடயமாகநடாத்தி வருகின்றது. வழிகாட்டும் விளம்பரங்களையும் வெளியிடுகின்றன. சுயஉதவி கோருவோருக்கும் அரசாங்கத்தினால் உதவிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**நிறைவுரை**

பனை மரமானது வடஇலங்கை மக்களுக்கு இறைவனால் இயற்கையாகக் கொடுக்கப்பட்ட தொரு வாழ்வாதார வளமாகும். இத்தகைய வளமானது வடஇலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அடையாளங் காணப்படுகின்றது. அச்சமயத்தில் விறகின் எச்சமாக எரிந்த நிலையில் காணப்பட்ட பனையினது வளர்ச்சியும் முக்கியத்துவமும் வரலாற்று ரீதியாகக் காலத்திற்குக்காலம் வடஇலங்கைப் பொருளாதாரத்தில் அதிகரித்து வந்தமையினைச் சான்றுகள் மூலமாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. எமது முன்னோர்களது தேசிய உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பனை வளத்தினது உணவுகளை நிராகரித்து நவீன உணவுமுறையினை நாடியதன்விளையே தற்கால சமுதாயத்தவர்கள் எதிர்நோக்கிவருகின்ற புதிய நோய்களாகும். எனவே இதனது முக்கியத்துவத்தினை அறிந்த இலங்கை அரசாங்கம் சுதந்திரத்தின் பின்னராக இவற்றினை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியில் இறங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புக்கள்**

**தமிழ்**

1.ஏகநாயகவல்லி,சி.(2003) ஈழவரலாற்றுப் பதிவுகள், அரோவெப் வெளியீடு, கனடா.
2.கணபதிப்பிள்ளை, க.(1962) ஈழத்து வாழ்வும் வளமும், பாரதி புத்தக வெளியீடு, யாழ்ப்பாணம்.
3. கணபதிப்பிள்ளை, க.(2006) "யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்", யாழ்ப்பாணம் - மொழியும் வாழ்வும், (மனோண்மணி,ச.இரகுநாதன்,ம.), கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.4
4..கிருஸ்ணராஜா,செ.(2000) இலங்கை வரலாறு- பாகம் - II, பிறைநிலா வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.
.5. குலரத்தினம், கா.சி.(1977) பனைவளம், மில்க்வைற், யாழ்ப்பாணம்.
6. சங்கரன்.(1986) மகாவம்சம்(தமிழ் மொழி பெயர்ப்பு),கொழும்பு.
7..சம்பந்தம்,கே.(1966) இனிக்கும் பதநீர், சென்னை மாநிலப் பனைவெல்லச் சமேளனம், சென்னை.
8. சிவசாமி,வி.(1990) தீவகம் - ஒரு வரலாற்று நோக்கு, பதிப்பு உரிமை ஆசிரியர், யாழ்ப்பாணம்.
9. சிவசாமி, வி.(2014) "போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஈழத்தில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை", இலங்கை வரலாறு (1505-1796) கட்டுரைகளின் தொகுப்பு, ப.ஆ.அருந்தவராஜா.க, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.
10.சிவலிங்கராஜா,எஸ்.(2014ஒக்ரோபர்) "தமிழ் மக்களது வாழ்வியலிற் பனை". கலைக்கேசரி, வீரகேசரி எக்ஸ்பிரஸ் வெளியீடு, கொழும்பு.
11. நித்தியானந்தம், வி.(2003) இலங்கையின் பொருளாதார வரலாறு - வடக்கு-கிழக்குப் பரிமாணம், யாழ்ப்பாணம்.
12. பத்மநாதன், சி.(2003) இலங்கையில் வன்னியர்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
13.பத்மநாதன்,சி.(2002) இலங்கைத் தமிழர் சேவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
14. பத்மநாதன்,சி.(2011) யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
15. பாக்கியநாதன்,மு.(2003) பனையியல், பதிப்பு.உரிமை தவமலர், யாழ்ப்பாணம்.
.16. விசாகருபன்,கி.(2004) நாட்டார் வழக்காற்றியல், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

1. Arasaratnam,S.( 1988 ) Dutch power in Ceylon, Navarang,New Delhi.
2. Arasaratnam,S.(1982) 'Historical foundation of the colony of the Tamils of North Sri Lanka', Thanthai Chelva Memorial lecture, Jaffna.
3 Gunasinghe,P.A.(2007) The Tamils of Sri Lanka, Cave&Co. Ltd, Colombo.
4. Ferguson,Donald.(1998) The Earliest Dutch visits to Ceylon, Asian Educational Services, New Delhi.
5.Martyn,H.(1923) Notes on Jaffna, American Ceylon Mission Prees, Tellippalai.
6. Pieris,P.E.(1995) Ceylon and the Hollanders,(1658-1796), Navrang, Colombo.
7. Dairy of Jan Schreuder, Governor of Ceylon, (1760July18), Hooge Regeering Van Batavia,535.

**பத்திரிகைகள்**

1.ஈழகேசரி வெளியீடுகள், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
2. உதயன் வெளியீடு, உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.